# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

# OS.No.112/2024

dated : 14.10.2025

P.W.1

Name ராஜ ராஜேஸ்வரி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**10, 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் பெயர் ராஜ ராஜேஸ்வரி ஆகும். வாரிசு சான்றில் ராஜேஸ்வரி என்று மட்டுமே உள்ளது என்றால் சரிதான். நான் சிந்தாமணியில் குடியிருக்கிறேன். 10, 11 பிரதிவாதிகளைத் தெரியும். அவர்களும் சிந்தாமணியில் குடியிருக்கிறார்கள். என் வீட்டிற்கு அருகில் குடியிருக்கிறார்கள் என்றால் 20 வீடுகள் தள்ளி குடியிருந்து வருகிறார்கள். 1983 ல் எனக்கு திருமணமானது. என் தந்தை என் திருமணத்தை நடத்தி வைத்தார். நல்ல முறையில் திருமணம் நடத்தி வைத்தார் என்றால் வழக்கமான முறையில் திருமணத்தை நடத்தி வைத்தார். எங்களுடன் பிறந்தவர்களில் மூத்தவர் பெயர் குமாரசாமி. அவருக்கு திருமணமாகி குழந்தைகள் உள்ளனர். குமாரசாமி இறந்துபோனார் அவரது மனைவி மற்றும் குழந்தைகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 6 முதல் 8 பிரதிவாதிகள் அவர்கள் வாரிசுகள் ஆவார்கள். 2017 ம் ஆண்டிலேயே 10, 11 பிரதிவாதிகள் அதில் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் 2024 ம் ஆண்டிற்கு பின்னர்தான் அந்த விவரங்கள்

எனக்கு தெரியும். நான் கூறுவது பொய் என்றும் 2018 ஜனவரி மாதம் நடைபெற்ற புதுமனை புகுவிழாவிற்கு எனக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு நானும் அந்த வீட்டிற்கு சென்று அன்பளிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த விழாவில் நானும் கலந்து கொண்டு புகைப்படம் எடுத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. அதை மறைப்பதற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு அருகிலேயே 2017 ம் ஆண்டு வழக்குரைச் சொத்தில் வீடு கட்டியிருக்கும் விவரம் எனக்கு தெரிந்திருந்த பின்னரும் தற்போதுதான் தெரியும் என்று கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. எனக்கு வழக்குரைச் சொத்துக்களில் 1/6 பாகம் கிடைக்கதக்கது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 10, 11 பிரதிவாதிகளின் கிரைய ஆவணம் செல்லாது என்று விளம்புகை செய்ய தனியே பரிகாரம் ஏதும் கோரவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ல் கூறப்பட்டுள்ள விவரங்களை தற்போது படித்துக் காட்டினால் உண்மை என்றால் ஏற்றுக் கொள்கிறேன். அந்த ஆவணத்தில் என் தந்தை உயிருடன் இருந்தபோதே ரூ.55,000/- பணம் பெற்றுக் கொண்டதாக அதில் கூறப்பட்டுள்ளது தவறாகும். அந்த பணம் என் தந்தையால் பெற்றுக்கொள்ளப்பட்டது என்றும் அதிலும் எனக்குரிய தொகையை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. 2005 ம் ஆண்டு என் தந்தை ஒரு உயில் ஆவணம் எழுதினார் என்றால் சரிதான். அதில் யார் யாருக்கு எந்தெந்த சொத்துக்கள் சேர வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தின் படியும் வாய்மொழி பாகப்பிரிவினையின் படியும் 1ம்

பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவர் 10,11 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணத்தில் 1982ம் வருடத்திய ஆவண எண். 1378 நாள் 10.08.1982ம் தேதி சுப்பிரமணியன் என்பவருக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்து என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்திலும் அதே விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் மேற்படி ஆவண விவரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தை தாக்கல் செய்தால் என் தந்தை சுப்பிரமணியன் கிரையம் பெற்ற தனிச்சொத்து என்ற விவரம் தெரிந்துவிடும் என்பதாலேயே அது பற்றிய விவரங்களை எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரைச் சொத்துக்களில் மேலும் 2 நபர்கள் வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கப்படாத நபர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் வேண்டுமென்றே வழக்கின் தரப்பினராக விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. என் தந்தை எழுதி வைத்த உயில் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதே தாக்கல் செய்தால் உயில் ஆவணத்தின் மூலம் சொத்துக்கள் ஒதுக்கப்பட்ட விவரம் தெரிந்துவிடும் என்பதாலேயே அதை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. பூர்விக சொத்துக்களில் இருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு என் தந்தை பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டதாக கூறுவதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 3 முதல் 8 பிரதிவாதிகள் பாகத்திற்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுவிட்டது

என்பதால்தான் அவர்கள் இந்த வழக்கை எதிர்கொள்ளாமல் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 23.11.2005 தேதியில் ராமு அம்மாள் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதே தேதியில் என் தந்தை ராமுஅம்மாளிடமிருந்து பணப்பற்று இரசீதும் வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. இந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் வழக்கிற்காக வேண்டுமென்றே தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ராமு அம்மாள் உயிருடன் இருந்தபோதே உரிமை மாற்றம் ஏதும் செய்யவில்லை என்றால் அதுபற்றியும் எனக்கு தெரியாது. என் தந்தை 2011 ஆண்டு இறந்துபோனார். எனவே ராமு அம்மாள் பெயரிலிருந்த பொது அதிகார ஆவணம் அற்றுப்போய்விட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ராமு அம்மாள் வாரிசுகள் பொது அதிகார ஆவணம் மற்றும் என் தந்தை எழுதிக் கொடுத்த பணப்பற்று இரசீது ஆகியவற்றை காண்பித்து உரிமை மாற்றம் ஏற்படவில்லை என்பதை கூறி ஆவணம் எழுதித்தரும்படி கேட்டதால் 2017 ம் ஆண்டு வா.சா.ஆ.9, 10 ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9, 10 ஆவணங்களில் உயில் ஆவணம் பற்றிய விவரங்கள் கூறப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 10, 11 பிரதிவாதிகள் முறையான மறுபயனுக்கு கிரையம் பெற்ற நல்லெண்ண கிரையதாரர்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நாளது தேதிமுதல் 9 ஆண்டுகளாக அனுபவித்து வரும் சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் நாங்கள் அனைவரும் கூட்டுச் சேர்ந்து இவ்வழக்கை தாக்கல்

செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகப்பிரிவினை செய்யப்பட்டும் உயில் மூலமாகவும் ஒதுக்கப்பட்டும் இவ்வழக்கு சொத்துக்களையும் அபகரிக்க திட்டமிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கட்டியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. என் தந்தை 07.10.2005 ம் தேதியில் எழுதிய உயில் ஆவணம் தவிர வேறு உயில் ஆவணம் எழுதவில்லை என்றால் என் தந்தை எந்த உயிலும் எழுதவில்லை. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.14 18:00:43 +0530